# ரமலானும் இரவு தொழுகையும்

தலைப்பு : ரமலானும் இரவு தொழுகையும்

வரிசை : 712

இடம் : மஸ்ஜிதுல் ஹுதா, தாருல் ஹுதா, மண்ணடி, சென்னை – 1

உரை : உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

நாள் : 07-04-2022 | 06-09-1443

**بسم الله الرحمن الرحيم**

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

அன்பிற்குரிய சகோதரர்களே! சகோதரிகளே! அல்லாஹ்வைப் போற்றி புகழ்ந்து அல்லாஹ்வுடைய தூதர் மீதும், அந்த தூதரின் கண்ணியத்திற்குரிய குடும்பத்தார் தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறியவனாக, உங்களுக்கும் எனக்கும், அல்லாஹ்விடத்தில் இம்மை மறுமையில் வெற்றி வேண்டியவனாக, நல் பாக்கியங்களை வேண்டியவனாக, அல்லாஹ்வுடைய அன்பையும், விசேஷமான மன்னிப்பையும் வேண்டியவனாக, இந்த சிறிய அமர்வை ஆரம்பம் செய்கின்றேன்.

அன்பு சகோதரர்களே! ரமலானுடைய மாதம் கிடைக்க பெற்று, சில தினங்கள் நம்மை விட்டு பிரிந்து சென்று விட்டனர். இன்னும், சில தினங்கள் நமக்கு மிச்சம் இருக்கின்றன. இந்த கழிந்த சில தினங்களில், யார் இந்த ரமலானை பயன்படுத்திக் கொண்டார்களோ, கண்டிப்பாக அவர்கள் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள்.

எஞ்சி இருக்க கூடிய, சில நாட்களில் நம்மிலே எத்தனை பேர் உயிரோடு இருப்போமா? எத்தனை பேர் அல்லாஹ்வை சந்திப்பதற்கு அவர்களுக்கு விதியில் எழுதப் பட்டிருக்கிறதோ, அல்லாஹ் மிக அறிந்தவன். ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிக நீண்ட ஒரு எதிர்பார்ப்போடு இந்த ரமலானை எப்பொழுதும் அவர்கள் அடைவார்கள்.

ரமலானை குறித்து, அதனுடைய சிறப்புகளை தங்களது தோழர்களுக்கு எடுத்துக் கூறி, அந்த ரமலானை எதிர்பார்த்து இருப்பதிலேயே ஆர்வத்தை ஏற்படுத்துவார்கள். பொதுவாகவே, வாழ்க்கையே வணக்கமாக, இபாதத்தாக, ஆக்கிக் கொண்டவர்கள் தான் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களால் உருவாக்கப்பட்ட சமுதாயமும்.

நாம் இப்போது, வாழ்க்கையில் ஒரு குறுகிய சிறிய பகுதியாக இபாதத்தை ஆக்கி இருக்கிறோம். ஆனால், அவர்களோ, வாழ்க்கையே இபாதத்தாக ஆகி இருந்தார்கள். தொழுகை, நஃபிலான

# ரமலானும் இரவு தொழுகையும்

நோன்புகள், குர்ஆன் அதிகமாக ஓதுவது, திக்ருகள் அதிகமாக செய்வது, தான தர்மங்கள் செய்வது, மார்க்க கல்வியை தொடர்ந்து படிப்பது, படித்த மார்க்க கல்வியை, பிற மக்களுக்கு தொடர்ந்து இறுதி மூச்சு வரை எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் கற்றுக் கொடுப்பது, அல்லாஹ்வுடைய பாதையிலே ஜிஹாதுக்கு செல்வது, இப்படியாக வாழ்க்கையை அப்படியே வணக்கமாக மாற்றி இருந்தார்கள்.

அப்படி இருந்தவர்கள், இபாதத்துக்காக உள்ள, இந்த ரமலானை அடையப் பெற்றால், இன்னும் எப்படி இந்த ரமலானை பயன்படுத்தி இருப்பார்கள்? ஒரு வியாபாரி, எப்பொழுதுமே காலையில் 7 : 00 மணிக்கு கடையை திறப்பாரு. கடைசி கஸ்டமர் வரும் வரைக்கும் முழு உற்சாகத்துடன் வியாபாரத்தில் ஈடுபடுவார் என்று இருக்கும் பொழுது, அந்த வியாபாரிக்கு சீசன் வந்தால் அவருடைய ஆர்வம் அவருடைய உற்சாகம் எப்படி இருக்கும்?

யோசித்துப் பாருங்கள். எப்பொழுதுமே. காலையில் 7:00 மணிக்கு கடையை திறந்து, கஸ்டமரை எதிர்பார்த்து கொண்டிருப்பவர், கஸ்டமருக்கு சுறுசுறுப்பாக பணிவிடை செய்பவருக்கு, ஒரு சீசன் வந்து விட்டால், அவருடைய உற்சாகத்தை சொல்லவா வேண்டும். வியாபாரத்தில் அவர் காட்டக்கூடிய அந்த முனைப்பை எந்த அளவிற்கு இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

சகோதரர்களே! எப்படி நாம் துனியாவில் இருந்தோமோ, இருக்கிறோமோ, சஹாபாக்கள் அப்படியே இபாதத்தில் இருந்தார்கள். ஆகிறத்துடைய விஷயத்தில் இருந்தார்கள். ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். அவர்கள் ஒரு தர்கீப் ஒரு ஆர்வத்தை அவர்கள் ஊட்டி விட்டார்கள் என்றால், இன்று நம்மை போன்று ஸஹாபாக்கள் இல்லை. அதை உடனடியாக முந்திக்கொண்டு நான் செய்ய வேண்டும் என்பதிலே போட்டி போடுபவர்களாக இருந்தார்கள்.

4046 – حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ مُحَمَّدٍ، حَدَّثَنَا سُفْيَانُ، عَنْ عَمْرٍو، سَمِعَ جَابِرَ بْنَ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: قَالَ رَجُلٌ لِلنَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ أُحُدٍ أَرَأَيْتَ إِنْ قُتِلْتُ فَأَيْنَ أَنَا؟ قَالَ: «فِي الجَنَّةِ فَأَلْقَى تَمَرَاتٍ فِي يَدِهِ، ثُمَّ قَاتَلَ حَتَّى قُتِلَ

அனேகமாக உஹது போராக இருக்கும். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். இப்போது யார் கொல்லப்படுவார்களோ, அவர் ஷஹீது. அல்லாஹ்வுடைய பாதையிலே அவர் ஷஹீது. அவர் சொர்க்கத்தில் இருப்பார் என்று சொன்னார்கள். மதியம் வரை போரிலே ஈடுபட்டு கடும் பசியோடு இருந்த ஒரு தோழர், கையில் சில பேரீத்தம் பழங்களை வைத்து, அந்தச் சின்ன இடைவெளியிலே, அனேகமாக இரண்டு மூன்று பேரித்தம் பழங்கள் இருந்து இருக்கும். அதை சாப்பிட ஆரம்பித்தார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்து இந்த செய்தி கிடைக்கிறது. இப்போது போரிலே கொல்லப்படுபவர் ஷஹீது என்று. கையில் இருந்த அந்த பேரித்தம் பழங்களை அப்படியே எரிந்து விட்டு, அவர் போர்க்களத்திலே, போர் மைதானத்திலே நுழைந்தார். ஷஹீத் ஆகின்ற வரை போரிட்டுக் கொண்டே இருந்தார்.

அறிவிப்பாளர் : ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 4046

# ரமலானும் இரவு தொழுகையும்

இப்படி உயிரையே அல்லாஹ்வின் பாதையிலே துச்சமாக மதித்தவர்களுக்கு, மற்ற விஷயங்களைப் பற்றி என்ன சொல்வது? எந்த ஒரு தர்க்கிப் ஆர்வத்தையும், ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து செவியுற்று விட்டால், அதில் நான் தான் முந்தியவனாக இருக்க வேண்டும் என்று போட்டி போடுகின்ற வழக்கம் சஹாபாக்கள் இடத்தில் இருந்து வந்தது.

அப்படி இருக்கும் பொழுது,

مَن صَامَ رَمَضَانَ، إيمَانًا واحْتِسَابًا، غُفِرَ له ما تَقَدَّمَ مِن ذَنْبِهِ

யார் ரமலானில் நோன்பு வைப்பார்களோ ஈமானோடு, இஹ்திஸாபுடன், அல்லாஹ் அவர்களின் பாவங்களை மன்னிப்பான், யார் ரமலானுடைய இரவிலே நின்று வணங்குவார்களோ, ஈமானோடு இஹ்திஸாபுடன் அவர்களது பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 37, 38

என்ற இத்தகைய நற்செய்தியை சஹாபாக்கள் கேட்டதற்கு பிறகு, அவர்கள் இந்த ரமலானில் அலட்சியம் செய்து இருப்பார்களா? இன்று நம்மில் பலர் அலட்சியம் செய்வது போன்று. ஊர் சுற்றுவது போன்று, விளையாடுவது போன்று, இன்னும் நேரங்களை கழிப்பது. சிலர் இடத்திலே, நேரம் கொட்டிக்கிடக்கிறது. அதை எப்படி கழிப்பது என்று தெரியாமல் வெட்டியாக கழித்து கொண்டிருக்கின்றார்கள்.

அல்லாஹ் பாதுகாப்பானாக! யார் இவர்கள்? இவர்கள் இந்த உலகத்தினுடைய ஒவ்வொரு நொடியும், மறுமை சொர்க்கத்திற்கான விலை, கிரையம் என்பதை மறந்தவர்கள். அறியாதவர்கள். இந்த உலகத்தினுடைய ஒவ்வொரு நேரமும், மறுமைக்கான, ஆகிரத்திற்கான, சொர்க்கத்திற்கான, கிரையம் என்பதை புரிந்து கொண்டவர்களுக்கு, அவர்களுக்கு அமலுக்கு நேரம் போதாது. இபாதத்திற்கு அவர்களுக்கு நேரம் போதாது.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சுருக்கமாக ஒரு அந்த இபாதத்துடைய பட்டியலை பார்த்தால், பகலிலே ரமலானுடைய நோன்பு. பிறகு தேவையான அளவு சிறிய ஓய்வு, தான தர்மங்கள், இப்படியாக அவர்களுடைய பகல். மக்களுக்கு இல்மை கற்றுக் கொடுப்பது. ஜிப்ரயீல் அலைஹி ஸலாத்துவஸலாம் அவர்களுடைய வருகை. அவர்களோடு குரானை பரிமாறிக் கொள்வதும்.

இவர்கள் ஓத ஜிப்ரயீல் கேட்க, பிறகு ஜிப்ரயீல் ஓத, இவர்கள் கேட்க என்று அந்த ஆண்டு வரை குர்ஆனிலே எவ்வளவு இறக்கப்பட்டு இருந்ததோ, அதை அனைத்தையும் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களோடு ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தவூர் செய்து கொள்வார்கள்.

அதற்குப் பிறகு, மக்ரிபுடைய நேரம் வந்துவிட்டால், இன்று நாம் எப்படி இந்த இரவை கழிக்கிறோமோ அப்படி கழிந்தது அல்ல. ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய இரவும் ஸஹாபாக்களுடைய இரவும். நம்முடைய இஃப்தார் உடைய நேரம் நம்முடைய தொழுகை நேரத்தை விட அதிகம்.

அந்த இப்தர்கான ஏற்பாடுடைய நேரம் நம்முடைய கியாமுல்லைல் உடைய நேரத்தை விட அதிகம். பிறகு அந்தச் சின்ன இபாதத்திற்கு பிறகு ஓய்வு என்று நாம் எடுப்பது. பிறகு ஸஹருக்கு ஏற்பாடு. இப்படியாக பார்த்தோமேயானால் ஒரு பெயரளவிற்கு சில இபாதத்துகளை நம்முடைய வாழ்க்கையிலே ஒட்டி வைத்துக் கொண்டு அந்த இரவையும் பெரும்பாலும் வீணடிக்கின்ற ஒரு பழக்கத்தில் தான் நாம் இருக்கின்றோம். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அந்த இரவோ சஹாபாக்கள் உடைய இரவோ அப்படி கழியக்கூடியது அல்ல. மக்ரிபுடைய தொழுகை. பிறகு அதற்குப் பிறகு, ஈடுபாடு. குர்ஆன் ஓதுவது. பிறகு இஷா உடைய தொழுகை. அதன் பிறகு இரவு வணக்கத்திலே ஈடுபடுவது.

924 – حَدَّثَنَا يَحْيَى بْنُ بُكَيْرٍ، قَالَ: حَدَّثَنَا اللَّيْثُ، عَنْ عُقَيْلٍ، عَنِ ابْنِ شِهَابٍ، قَالَ: أَخْبَرَنِي عُرْوَةُ، أَنَّ عَائِشَةَ، أَخْبَرَتْهُ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خَرَجَ ذَاتَ لَيْلَةٍ مِنْ جَوْفِ اللَّيْلِ، فَصَلَّى فِي المَسْجِدِ، فَصَلَّى رِجَالٌ بِصَلاَتِهِ، فَأَصْبَحَ النَّاسُ، فَتَحَدَّثُوا، فَاجْتَمَعَ أَكْثَرُ مِنْهُمْ، فَصَلَّوْا مَعَهُ، فَأَصْبَحَ النَّاسُ، فَتَحَدَّثُوا، فَكَثُرَ أَهْلُ المَسْجِدِ مِنَ اللَّيْلَةِ الثَّالِثَةِ، فَخَرَجَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَصَلَّوْا بِصَلاَتِهِ، فَلَمَّا كَانَتِ اللَّيْلَةُ الرَّابِعَةُ عَجَزَ المَسْجِدُ عَنْ أَهْلِهِ حَتَّى خَرَجَ لِصَلاَةِ الصُّبْحِ، فَلَمَّا قَضَى الفَجْرَ أَقْبَلَ عَلَى النَّاسِ، فَتَشَهَّدَ، ثُمَّ قَالَ: «أَمَّا بَعْدُ، فَإِنَّهُ لَمْ يَخْفَ عَلَيَّ مَكَانُكُمْ، لَكِنِّي خَشِيتُ أَنْ تُفْرَضَ عَلَيْكُمْ، فَتَعْجِزُوا عَنْهَا» قَالَ أَبُو عَبْدِ اللَّهِ: تَابَعَهُ يُونُسُ

அதாவது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த ரமலானுடைய இரவு தொழுகையை ஆரம்பித்தபோது, இதற்கான ஆர்வத்தை ஊட்டி. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மஸ்ஜிதிலே வந்து தொழுகின்றார்கள். சஹாபாக்கள் சேர்ந்து கொள்கிறார்கள். சேர்ந்து கொள்கிறார்கள். சேர்ந்து கொள்கிறார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

யார் தொழ வைக்கின்றார்கள்? ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். கொஞ்சம் கொஞ்சமாக சஹாபாக்கள் சேர்கின்றார்கள். அன்று இரவு அப்படியே கழிகிறது. அடுத்த நாள் இரவு பார்த்தால், சுபஹானல்லாஹ்! எங்கிருந்தோ எல்லாம் தோழர்கள் ஒன்று கூடி விட்டார்கள். மஸ்ஜிதிலே இடம் இல்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தொழ வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். கொஞ்சம் நேரம் விட்டார்கள். ஸஹருக்காக வேண்டி, துஆ விற்காக வேண்டி, அவர்கள் இரவுத் தொழுகை முடித்துக் கொண்டு, கொஞ்ச நேரம் அவர்கள் கொடுத்தார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

சஹாபாக்கள் சொன்னார்கள். அல்லாஹ்வின் தூதரே! மீதி இருக்க கூடிய இந்த கொஞ்ச நேரத்திலும் எங்களுக்கு நீங்கள் தொழ வைத்திருக்கலாம் அல்லவா? எப்படி நமக்கும் அவர்களுக்கும் அப்படியே நேர் எதிர்மறையாக இருக்கிறது. எதிர்ப்புறமாக இருக்கிறது. நாம் என்ன சொல்கின்றோம்? கொஞ்ச நேரம் தொழவைத்து ரெஸ்ட் கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றோம்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

எப்படி? கொஞ்ச நேரம் தொழுததற்கு ரெஸ்ட். ஒரு மணி நேரம், ஒன்றரை மணி தொழுதற்கு நமக்கு ஐந்து மணி நேரம், 10 மணி நேரம் ரெஸ்ட் தேவைப்படுகிறது. அவர்கள் 5 மணி நேரம் 6 மணி நேரம் தொழுதுவிட்டு ஸஹருக்கான கொஞ்சம் இடைவெளியை கொடுத்துவிட்டு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திரும்புகின்றார்கள். அல்லாஹ்வின் தூதரே! மீதி இருக்கக்கூடிய இந்த இரவின் கொஞ்சம் பகுதியிலும் எங்களுக்கு நபில் தொழுது வைத்திருக்கலாமே என்ற சஹபாக்கள் சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

அடுத்த மூன்றாவது நாளும் இன்னும் கூட்டம் அதிகமாகிவிட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்  வருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பயந்துவிட்டார்கள். இவர்கள் மீது இந்த இரவுத் தொழுகை கடமையாக்கப்பட்டு விடுமோ என்று. ஸஹாபாக்கள் hujart விற்கு வெளியிலே இருந்து கொண்டு, அவர்கள் பல வகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உணர்த்தி பார்க்கிறார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று. அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். எனக்கு தெரியும் நீங்கள் ஒன்று கூடி இருப்பது. ஆனால் உங்கள் மீது இந்த தொழுகை ஃபர்ளாக்கப்பட்டு விடுமோ என்ற பயத்தால் நான் விட்டு விடுகின்றேன் என்று ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 924, 1129

அதற்குப் பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இறப்பு ஏற்படுகிறது. பிறகு அபூபக்கர்  ரதியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலம் அந்தப் போரிலேயே குழப்பத்திலேயே முடிந்து விடுகிறது. மக்கள் தனித்தனியாக இமாமை பின்பற்றி தொழுது கொண்டிருந்தார்கள்.

2010 – وعَنِ ابْنِ شِهَابٍ، عَنْ عُرْوَةَ بْنِ الزُّبَيْرِ، عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ القَارِيِّ، أَنَّهُ قَالَ: خَرَجْتُ مَعَ عُمَرَ بْنِ الخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ، لَيْلَةً فِي رَمَضَانَ إِلَى المَسْجِدِ، فَإِذَا النَّاسُ أَوْزَاعٌ مُتَفَرِّقُونَ، يُصَلِّي الرَّجُلُ لِنَفْسِهِ، وَيُصَلِّي الرَّجُلُ فَيُصَلِّي بِصَلاَتِهِ الرَّهْطُ، فَقَالَ عُمَرُ: «إِنِّي أَرَى لَوْ جَمَعْتُ هَؤُلاَءِ عَلَى قَارِئٍ وَاحِدٍ، لَكَانَ أَمْثَلَ» ثُمَّ عَزَمَ، فَجَمَعَهُمْ عَلَى أُبَيِّ بْنِ كَعْبٍ، ثُمَّ خَرَجْتُ مَعَهُ لَيْلَةً أُخْرَى، وَالنَّاسُ يُصَلُّونَ بِصَلاَةِ قَارِئِهِمْ، قَالَ عُمَرُ: «نِعْمَ البِدْعَةُ هَذِهِ، وَالَّتِي يَنَامُونَ عَنْهَا أَفْضَلُ مِنَ الَّتِي يَقُومُونَ» يُرِيدُ آخِرَ اللَّيْلِ وَكَانَ النَّاسُ يَقُومُونَ أَوَّلَهُ

உமருல் ஃபாருக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரமலான் உடைய  இரவிலே இஷாவுக்கு பிறகு வரும்போது பார்த்தால், அங்கே குர்ஆன் ஓதத் தெரிந்த ஒருவர், தொழ வைக்க அவருக்கு பின்னால் இருவர் மூவர் தொழ, ஒருவருக்கு பின்னால் நான்கு ஐந்து பேர் தொழ,

இப்படியாக மஸ்ஜிதிலே பல ஜமாத்துகள் நடந்து கொண்டிருந்தன. உமர் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அந்த எல்லோரையும் ஒன்று சேர்த்து, ஒரு ஜமாத்தாக அவர்கள் மஸ்ஜிதிலே தொழ

வைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். உபை இப்னு கபாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஆண்களுக்காகவும், தமீமுத்தார ரலியல்லாஹு அன்ஹு அவர்களைபெண்களுக்காகவும், தொழ வைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

அறிவிப்பாளர் : அப்துர்ரஹ்மான் இப்னு அப்துல் காரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா, எண் : 1327

அந்த இரண்டு இமாம்களும் மக்களுக்கு எப்படி தொழ வைத்தார்கள்? ஏறக்குறைய சூரத்துல் பகராவுடைய அளவிற்கு ஒவ்வொரு இரவும் நிறுத்தி நிதானமாக ஓதக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய அந்த தொழுகை இரவிலே ஆரம்பமாகி இரவினுடைய பிற்பகுதி வரை செல்லக்கூடியதாக இருந்தது. வயதானவர்கள் தங்களுடைய அசாவின் மீது சாய்ந்து கொண்டு அந்த தொழுகையை நிறைவேற்றுவார்கள் என்று இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பதிவு செய்கின்றார்கள்.

சகோதரர்களே! இது பொதுவாக அந்த சஹாபாக்களை இரவு வணக்க வழிபாடாக இருந்தது. மேலும் பல அறிவிப்புகளை பார்க்கின்றோம்.

»، قَالَ: فَلَمَّا كَانَتِ الرَّابِعَةُ لَمْ يَقُمْ، فَلَمَّا كَانَتِ الثَّالِثَةُ جَمَعَ أَهْلَهُ وَنِسَاءَهُ وَالنَّاسَ، فَقَامَ بِنَا حَتَّى خَشِينَا أَنْ يَفُوتَنَا الْفَلَاحُ، قَالَ: قُلْتُ: وَمَا الْفَلَاحُ؟ قَالَ: السُّحُورُ، ثُمَّ لَمْ يَقُمْ بِقِيَّةَ الشَّهْرِ

சஹர் உடைய நேரம் கிடைக்குமா? சஹருடைய நேரம் கிடைக்குமா? ஸஹர் செய்வதற்கு வாய்ப்பு இருக்குமா? என்று பயப்பட கூடிய அளவிற்கு அந்த சஹாபாக்கள் உடைய இரவு வணக்க வழிபாட்டில் ஈடுபாடு இருந்தது.

அறிவிப்பாளர் : அபூதர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூ தாவுத், இப்னு மாஜா, எண் : 1375, 1327 குறிப்பு 1

பொதுவாக ரமலானுடைய மாதம் வந்து விட்டால், ஸலஃபுகளுடைய வணக்க வழிபாடுகள் எப்படி இருந்தது என்பதைத்தான் இன்ஷா அல்லா நாம் இந்த அமர்விலே கொஞ்சம் விரிவாக பார்க்க இருக்கின்றோம். இந்த ரமலான் உடைய மாதம், விசேஷமாக. தொழுகைக்காகவும் குர்ஆன் ஓதுவதற்காகவும், திக்குரு செய்வதற்காகவும், sadaqah தான தர்மங்கள் செய்வதற்காகவும், ஒதுக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட மாதம்.

ரமலானுடைய மாதம் குறிப்பாக. மற்ற எல்லா வணக்க வழிபாடுகளுக்கும், இந்த மார்க்கத்திலே ஒரு பங்கு இருந்தாலும் குறிப்பாக. பகலிலே நோன்பு. குர்ஆன் ஓதுவது. இரவிலே இரவுத் தொழுகை. குர்ஆன் ஓதுவது. அதுபோன்று தான தர்மங்கள். இது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ரமலானில் ஒரு தனித்துவமான அமலாக இருந்தது. சஹாபாக்களுடைய தனித்துவமான அமலாக இருந்தது.

# ரமலானும் இரவு தொழுகையும்

ஒரு விஷயத்தை நாம் இங்கே புரிய வேண்டும். அதாவது. ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த ரமதாணை பற்றி குறிப்பிடும் போது, அவர்களுடைய அந்த வழமை. ஒன்று. ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களோடு அவர்கள் அந்த குரானை ஓதி சரிபார்த்தது. அதற்கு பிறகு இரவு தொழுகையிலே அந்த குரானை அவர்கள் தொடர்ந்து ஓதியது. எவ்வளவு அதிகம் ஓத முடியுமோ அந்த அளவுக்கு அதிகம் ஓதியது.

அதுபோன்று அல்லாஹ் சுபஹானஹூவ தஆலா, இந்த ரமலான் மாதத்தோடு தொடர்பு படுத்தி இந்த குர்ஆனை நமக்கு சொல்லும் பொழுது.

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيضًا أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ

ரமழான் மாதம் எத்தகையது என்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் நேர்வழி உடைய சான்றுகளாகவும் இன்னும் உண்மை, பொய்யை பிரித்தறிவிக்கின்ற தெளிவான சத்தியத்தின் சான்றுகளாகவும் உள்ள அல்குர்ஆன் இறக்கப்பட்டது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தில் (உள்ளூரில்) தங்கி இருப்பாரோ அவர் அதில் கண்டிப்பாக நோன்பு நோற்கவும்.

இன்னும், எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருப்பாரோ அவர் (அந்த நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிடவும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவை நாடுகிறான். சிரமத்தை நாடமாட்டான். (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமைப்படுத்துவதற்காகவும்; உங்களை நேர்வழிபடுத்தியதற்காக அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும்; நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (ரமழான் மாதத்தில் நோன்பிருங்கள்)! (அல்குர்ஆன் 2 : 185)

ரமலான் உடைய மாதம் எத்தகையது என்றால், இதில் தான் அல்குர் ஆன் இறக்கப்பட்டது. நேர்வழி காட்டக்கூடிய, நேர்வழியின் தெளிவான ஆதாரங்களாக இருக்கக்கூடிய, அசத்தியத்தில் இருந்து சத்தியத்தை பிரித்தறிவிக்ககூடிய, இந்த குர்ஆன். இந்த ரமலான் மாதத்தில் இறக்கப்பட்டது.

இன்று அல்லாஹு தஆலா, இந்த ரமலானை சிறப்பிப்பதிலிருந்து, குர்ஆனுக்கும் ரமலானுக்கும் விசேஷமாக ஒரு தொடர்பு இருக்கிறது. பிறகு இந்த குர்ஆன் குறிப்பாக இறக்கப்பட்ட இரவை. அல்லாஹு தஆலா ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஒரு மாதமாக ஆக்கி இருப்பதிலிருந்தும், குர்ஆனுக்கும் இந்த மாதத்திற்கும் ஒரு விசேஷமான தொடர்பு இருக்கிறது.

ஆகவே ஒன்று. குர்ஆனை அதனுடைய அரபி வாசகங்களை தொடர்ந்து அதிகமதிகம் ஓதுவது. அந்த குர்ஆனை சிந்திப்பது. அதிலிருந்து படிப்பினை பாடங்கள் பெறுவது என்பது ரமலானுடைய மிக விசேஷமான ஒரு அமலாகும்.

ஒரு முஸ்லிம். வாழ்க்கையுடைய எல்லா பகுதியையும் இந்த அமலோடு அவன் தொடர்பில் இருக்க வேண்டும். குறிப்பாக. குறிப்பாக, இந்த ரமலான் மாதத்திலே, அவன் இந்த குர்ஆனை தன்னால் முடிந்த

அளவுக்கு. இத்தனை கத்தமா? இத்தனை முறை நான் இந்த குர்ஆனை முடிப்பேன் என்று தனக்குத்தானே ஒரு வைரியாகத்தை, ஒரு முடிவை, ஏற்படுத்திக் கொண்டு, அந்த அடிப்படையிலே தொடர்ந்து ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஓதி முடிப்பது. திரும்ப ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஓதி முடிப்பது. என்ற ஒரு வழக்கத்தை கண்டிப்பாக நாம் ஏற்படுத்த வேண்டும்.

இது சஹாபாக்கள் உடைய தாபியீன்களுடைய, தபத்தாபியீன்கள் இமாம்கள் உடைய வழமையாக இருந்தது. இப்பொழுது பாருங்கள். அதாவது அறிஞர்களில். மிகப்பெரிய அறிஞர். இமாம் மாலிக் இப்னு அனஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைப் பற்றி அவருடைய வாழ்க்கை குறிப்புலே அவர்களுடைய மாணவர்கள் எழுதுகின்றார்கள். தொடர்ந்து. அவர்கள் உடைய வாழ்க்கையே மஸ்ஜித் நபவிலே கல்வி கற்றுக் கொடுப்பதாக இருந்தது. ஏறக்குறைய 22, 23 வயது வரை, சிறு பிராயத்தில் இருந்து கல்வியை தேடுவதி லே ஈடுபட்டிருந்த இமாம் மாலிக் ரஹீமஹுல்லாஹ் அவர்கள். அவர்களுடைய ஆசிரியர் இப்போது நீ கல்வி படித்துக் கொடுக்கலாம் என்று சொன்னதிலிருந்து அவர்களுடைய இறுதி வாழ்க்கை வரை மஸ்ஜிதுன் நபவியிலே அவர்கள் தொடர்ந்து ஹதீஸ் பாடங்களை அல்லாஹ்விற்காக முஸ்லிம்களுக்கு நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்த ரமலான் மாதம் வந்துவிட்டால், இந்த ரமலான் மாதம் வந்து விட்டால், ஹதீஸ் படித்துக் கொடுக்கக்கூடிய தன்னுடைய பணியை நிறுத்திவிட்டு இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் உடைய வழக்கம் எப்படி இருந்தது? குர்ஆனுடைய பிரதியை கையில் எடுத்து, குர்ஆன் உடைய பிரதியை கையில் எடுத்து, அதை பார்த்து ஓதுவதிலே முழுமையாக ஈடுபட்டு விடுவார்கள்.

ஸுஃப்யான் யுஸவ்விர் (ரஹிமஹுல்லாஹ்) இவர்கள் யார்? இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ், அவர்களுக்கு முந்தி உள்ளவர்கள். அதாவது முஹத்திஸ்களுக்கெல்லாம் முஹத்திஸ். அமீருல் முஃமினின் ஃபில் ஹதீஸ் என்று சொல்லப்படும். மிகப்பெரிய ஒரு அறிஞர். மற்ற எல்லா வணக்கங்களையும் விட்டுவிட்டு, முழுமையாக குர்ஆன் ஓதுவதிலே அவர்கள் ஈடுபட்டு விடுவார்கள்.

இந்த அளவு நம்முடைய ஸலஃபுகள். இந்த குர்ஆனோடு நேரடியாக அதை பார்த்த ஓதுவதிலே அவர்கள் அந்த நேரங்களை கழித்து வந்தார்கள். இதில் எந்த அளவிற்கு அவர்கள் போட்டி போட்டார்கள். இப்பொழுது நம்மிலே சில பேருக்கு, ஏன் என்றால் அந்த பழக்கம் இல்லை. பத்து அடி கூட எந்திரிச்சி நடக்கக் முடியாத ஒருவரை ஓட்டப் பந்தயத்திலே ஓடவிட்டால் என்ன ஆகும்? சொல்லுங்கள் பார்க்கலாம். பழக்கம் வேண்டும் அல்லவா? எதற்குமே ஒரு பயிற்சி வேண்டும்.

எதற்குமே வாழ்க்கையிலே தொடர்ந்து ஒரு தன்னை இடுபடுத்தி அந்த வழக்கமும் பழக்கமும் ஏற்படுத்தியிருந்தால் தான் அதிலே அவரால் செய்ய முடியும். இப்பொழுது நம்பில் சில பேருக்கு, மணிக்கணாக பேச சொல்லுங்கள். பேசிக்கொண்டே இருப்பார்கள். மணிக்கணக்காக அரட்டை அடிங்க என்று சொன்னால். அதற்கும் தயார்.

எல்லாவற்றிற்கும் தயார். கையில் கொஞ்சம் குர்ஆனை கொடுத்து, ஒரு இரண்டு பக்கத்தை ஓத சொல்லுங்கள் என்றால்.கழுத்து வலி, கண்ணு வலி, முதுகு வலி, குறுக்கு வலியிலிருந்து அதற்குப் பிறகு எல்லாவற்றையும் சமாளித்து ஓத ஆரம்பித்து விட்டால், அந்த ஒரு பக்கத்தை முடிப்பதற்குள் 10 நிமிஷம் ஆய்டும் அதிலும் 10 தப்பு இருக்கும். அஸ்தஃபிருல்லாஹல் அளீம். இந்த அளவு தான்

# ரமலானும் இரவு தொழுகையும்

நம்முடைய மக்களுடைய குர்ஆன் ஓதக்கூடிய நிலை இருக்கிறது என்றால், இவர்கள் ரமலானில் எப்படி குர்ஆனிலே போட்டி போட முடியும்?

இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ். இவர்கள் என்ன செய்வார்கள்? பகலில் மட்டும். எப்படி? பகலில் மட்டுமே, ஒரு நாளைக்கு. ரமலானில் ஒரு கத்தம் செய்வார்கள். எப்படி செய்வார்கள்? பகலில். இரவிலே மக்களுக்கு தொழ வைப்பார்கள்.

இரவிலே மக்களுக்கு தொழ வைப்பார்கள். அது தனியாக. அது ஒரு தர்தீப். குர்ஆன் ஓதுவது போய்க்கொண்டிருக்கும். அதற்குப் பிறகு மக்களுக்கு தொழ வைத்ததற்கு பிறகு, திரும்ப கையிலே குர்ஆனை எடுத்து ஓத ஆரம்பித்து விடுவார்கள். ரமதான் உடைய ஒவ்வொரு மூன்று இரவிலும் ஒரு கத்தமை தனியாக செய்து விடுவார்கள்.

எதற்கு? இந்த விஷயத்தை சொல்ல வருகின்றோம். நம்முடைய சலஃபுகள் எப்படி புரிந்து இருந்தார்கள். குர்ஆன். ரமதானில் குர்ஆன் ஓதுவது என்றால் எப்படி புரிந்து வைத்திருந்தார்கள்? நம்மை போலவா? எடுத்து கொஞ்ச நேரம் இப்படியே பார்க்க வேண்டியது.

மேலோட்டமாக இரண்டு பக்கத்தை ஓதி முடிக்க வேண்டியது. அப்பா! பத்ரு போருக்கு போய்விட்டு வந்த மாதிரி. தூக்கி வைத்து விட்டு அல்லாஹ்! அதுவும் கடைசியில் மிச்சம் மீதி இருந்து, கடைசியில் தள்ளிக் கொண்டு போய், ஒரு கத்தமை பண்ணி விட்டோம் என்று சொல்வதற்குள் சுபஹானல்லாஹ்! இங்கே எப்படி போய்க்கொண்டே இருக்கிறது? பகலில் மட்டுமே. எவ்ரிடே! ஒவ்வொரு நாளும் ஒரு கத்தம்.

புரிகிறதா இல்லையா? அதுபோக. இரவில் மக்களுக்கு தொழ வைப்பது தனி. தொழ வைத்து முடித்துவிட்டு எல்லோரையும் அனுப்பியதற்கு பிறகு, தனியாக உட்கார்ந்து அவர்கள் ஓதுவதில், ஒவ்வொரு மூன்று நாளைக்கு, ஒரு கத்தமா முடிப்பவர்களாக இருந்தார்கள். அப்பொழுது கணக்கு செய்து பார்த்தால் எத்தனை கத்தம் வரும்? அதுல ஒரு பத்து வந்துவிட்டது. பிறகு ரமலானில் இது ஒரு 30. முப்பதும் பத்தும் 40. பிறகு தராவீஹ்லே ஓதுவது அது தனி. சுபஹானல்லாஹ்!

ஸயீத் இப்னு ஜுபைர் தாபியீன்களிலே ஒருவர். இமாம் இப்னு அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா உடைய மாணவர். இவர்கள் எப்படி என்றால். ஒவ்வொரு இரண்டு இரவிலும் ஒரு கத்தம் செய்து விடுவார்கள்.

அடுத்து பாருங்கள். இவர்களெல்லாம இமாம்கள். மார்க்க அறிஞர்கள். மன்னர்கள் எப்படி இருந்தார்கள்? நாம் சொல்கிறோம் அல்லவா? இமாம்களுக்கு, ஆலிம்களுக்கு, வெட்டியாக வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அதனால சும்மா ஓதிக் கொண்டே இருந்தார்கள். அப்படித்தான் ஆகிவிட்டது. எப்படி? நாம் எப்படி விளங்கி கொண்டிருக்கின்றோம் என்றால், ஆலிம்சா எல்லாம் நேர்ந்து விட்டவர்கள் மார்க்கத்திற்கு. அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் எல்லாவற்றையும்.

நமக்கு எவ்வளவு வேலை இருக்கிறது? நாம் எல்லாம் சாதாரண ஆளா என்று. மன்னர் வலீத் இப்னு அப்துல் மலிக். இவர் மன்னராக இருக்கின்ற நிலையில். ஒவ்வொரு மூன்று நாட்களிலும், ஒரு குர்ஆன் கத்தம் செய்யும் வழக்கம் உள்ளவராக இருந்தார். ரமலான் மாதத்தில் பொதுவாக. வாழ்க்கையிலேயே,

ஒவ்வொரு மூன்று நாளும். ரமலான் மாதம் வந்துவிட்டால், ரமலானிலே, குறைந்தது 17 முறை குரானை கத்தம் செய்யும் வழக்கம் உள்ளவராக இருந்தார். மன்னராக இருக்கக்கூடியவர்.

அப்பொழுது யார் அதிலே ஈடுபடுவார்களோ, யார் அதிலே ஈடுபடுவார்களோ, ஆர்வம் காட்டுவார்களோ, அவர்களுக்கு அல்லாஹ் லேசாக்கி விடுவான். அது தான் மேட்டர். அதுதான் விஷயம். அல்லாஹ் எப்படி சொல்லுகின்றான்?

وَاللَّيْلِ إِذَا يَغْشَى وَالنَّهَارِ إِذَا تَجَلَّى وَمَا خَلَقَ الذَّكَرَ وَالْأُنْثَى إِنَّ سَعْيَكُمْ لَشَتَّى فَأَمَّا مَنْ أَعْطَى وَاتَّقَى وَصَدَّقَ بِالْحُسْنَى فَسَنُيَسِّرُهُ لِلْيُسْرَى

இரவின் மீது சத்தியமாக, அது மூடும்போது! பகல் மீது சத்தியமாக, (வெளிச்சத்துடன்) அது வெளிப்படும்போது! ஆணையும் பெண்ணையும் படைத்தவன் மீது சத்தியமாக! (மனிதர்களே!) நிச்சயமாக உங்கள் முயற்சி (-உழைப்பு) பலதரப்பட்டதாக இருக்கிறது. ஆக, யார் தர்மம் புரிந்தாரோ, இன்னும், அல்லாஹ்வை அஞ்சினாரோ, இன்னும், (இஸ்லாம் எனும்) மிக அழகிய (மார்க்கத்)தை உண்மைப்படுத்தினாரோ, அவருக்கு சொர்க்கப் பாதையை நாம் இலகுவாக்குவோம். (அல்குர்ஆன் 92 : 1, 2, 3. 4. 5. 6. 7)

சொர்க்கத்தின் பாதையை தக்வா உள்ளவர்களுக்கு நாம் லேசாக்கி கொடுப்போம். இபாதத் இருக்கிறதே, அல்லாஹ் லேசாக்கினால் தான் நமக்கும் லேசாகும் அல்லாஹ் லேசாக்கி கொடுக்க வேண்டும் நமக்கு அதை அல்லாஹ் நமக்கு வசப்படுத்தி கொடுக்க வேண்டும்.

அதிலே நமக்கு அல்லாஹு தஆலா இன்பத்தை ஏற்படுத்த வேண்டும் அதற்காக வேண்டி விசேஷமாக நாம் அல்லாஹ்விடத்தில் துஆ செய்ய வேண்டும். சும்மா இல்லை. காசுக்காக துஆ செய்கிறோம். இல்லையா? பணத்திற்காக துஆ செய்கிறோம் இல்லையா? உடல் ஆரோக்கியத்திற்காக துஆ செய்கிறோம் அல்லவா? இபாதத்திற்கு ஏன் துஆ செய்வதில்லை? யா அல்லாஹ்! நான் பெரிய வணக்கசாலியாக ஆக வேண்டும்.

கேட்கின்றோமா? யா அல்லாஹ்! என்னை பெரிய பணக்காரனாக ஆகிவிடு என்று கேட்கின்றோமா? யா அல்லாஹ் இந்த ஊரிலே நான் தான் அதிக தர்மம் கொடுப்பவனாக இருக்க வேண்டும் என்று துஆ கேட்கின்றோமா? பயம். பணம் கையை விட்டு போய்விட்டால், நான் சொல்கிறது புரிகிறதா?

யா அல்லாஹ்! என்னை பெரிய வணக்கசாலியாக ஆக்கு. அதிகமாக நின்று தொழக் கூடியவனாக ஆக்கு. துஆ கேட்கின்றோமா? இவர்களுக்கு பயம். கேட்டுவிட்டால் அதிகமாக கஷ்டப்பட வேண்டுமே! கை வலிக்குமே! கால் வலிக்குமே!, என்ற இவனுக்கே பயம். அதனால் கேட்பதில்லை.

1522حَدَّثَنَا عُبَيْدُ بْنُ عُمَرَ بْنِ مَيْسَرَةَ، حَدَّثَنَا عَبْدُ بْنُ يَزِيدَ الْمُقْرِئُ، حَدَّثَنَا حَيْوَةُ بْنُ شُرَيْحٍ، قَالَ: سَمِعْتُ عُقْبَةَ بْنَ مُسْلِمٍ، يَقُولُ: حَدَّثَنِي أَبُو عَبْدِ الرَّحْمَنِ الْحُبُلِيُّ، عَنِ الصُّنَابِحِيِّ، عَنْ مُعَاذِ بْنِ جَبَلٍ، أَنَّ رَسُولَ صَلَّى عَلَيْهِ وَسَلَّمَ أَخَذَ بِيَدِهِ، وَقَالَ: «يَا

# ரமலானும் இரவு தொழுகையும்

مُعَاذُ، وَاللَّهِ إِنِّي لَأُحِبُّكَ، وَاللَّهِ إِنِّي لَأُحِبُّكَ»، فَقَالَ: " أُوصِيكَ يَا مُعَاذُ لَا تَدَعَنَّ فِي دُبُرِ كُلِّ صَلَاةٍ تَقُولُ: اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ، وَشُكْرِكَ، وَحُسْنِ عِبَادَتِكَ "، وَأَوْصَى بِذَلِكَ مُعَاذٌ الصُّنَابِحِيَّ، وَأَوْصَى بِهِ الصُّنَابِحِيُّ أَبَا عَبْدِ الرَّحْمَنِ

நபிமார்கள் எப்படி கேட்டார்கள்? எப்படி கேட்க சொன்னார்கள்? முஆத் இப்னு ஜபல் ரலியல்லாஹு அன்ஹு. அவர்களை ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கையைப் பிடித்து கொண்டார்கள். கையை பிடித்துக் கொண்டார்கள். முஆதே! உன்னை எனக்கு ரொம்ப பிடித்தது முஆதே! என்றார்கள். சுபஹானல்லாஹ்! எப்படி இருக்கும் அவர்களுக்கு.

அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூ தாவுது, எண் : 1522

அவர்கள் சொர்க்கத்தை நேராக பார்த்தது போல் இருக்கும் அல்லவா? அல்லாஹு அக்பர்! என்ன இது. சுபஹானல்லாஹ்! கையைப் பிடித்துக் கொண்டு முஆதே! உன்னை எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது, அல்லாஹ்வுக்காக எனக்கு பிடித்துள்ளது. நான் உனக்கு ஒரு து ஆவை கற்றுக் கொடுக்கின்றேன் என்றார்கள். என்ன துஆவை கற்றுக் கொடுத்தார்கள், ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

யா அல்லாஹ்! உன்னை நினைவு கூறுவதற்கு, உனக்கு நன்றி செலுத்துவதற்கு, அழகிய முறையில் உன்னை வணங்குவதற்கு, நீ எனக்கு உதவி செய். அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். யா அல்லாஹ்! நான் இரவெல்லாம் தொழுகனும் அதற்கு எனக்கு லேசாகி வை. யா அல்லாஹ்! நானும் குரானை சரளமாக அழகாக தெளிவாக ஓத வேண்டும் அதை எனக்கு லேசாக்கி கொடு. யா அல்லாஹ்! நான் அதிகமாக தர்மம் கொடுக்க வேண்டும் எனக்கு அது லேசாக்கி கொடு.

அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூ தாவுது, எண் : 1522

நாம் இன்னும் அமல்களை நேசிப்பவர்களாக மாறி இருக்கிறோமா? சொல்லுங்கள் பார்க்கலாம். இபாதத்தை நேசிப்பவர்களாக நாம் மாறி இருக்கிறோமா? இபாதத்தை செய்பவர்களாக மாறி இருக்கிறோம். இபாதத்தை நேசத்தோடு செய்பவர்களாக, நேசித்து செய்பவர்களாக, அந்த இபாதத்தில் ஈடுபாட்டை உணர்ந்து, ருசியை உணர்ந்து செய்பவர்களாக மாறி இருக்கிறோமா? அப்படி மாறி இருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது.

உஸ்மான் கனீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி வருகிறது. சொல்கிறார்கள், உங்களுடைய உள்ளம் சுத்தமாக இருந்திருக்குமேயானால், உங்களுடைய உள்ளங்கள் குர்ஆன் விஷயத்திலே, உங்களுடைய உள்ளங்கள் குர்ஆன் விஷயத்திலே, அது ஒருபோதும் நிரம்பி இருக்காது.

அதாவது எப்படி என்று சொன்னால், நாம் இன்றைக்கு ஒரு ஜுஸ் ஓதுவிட்டால், அதை ஓதி விட்டால் அப்பாடா! உங்களுடைய உள்ளம் சுத்தமாக இருந்திருக்குமேயானால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்றார்கள், ஓதிக்கொண்டே இருப்போம். ஓதிக் கொண்டே இருப்போம.

உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு ஒரு முறை ஹஜ்ஜுக்கு வந்திருக்கின்றார்கள், அவருடைய மகனாரும் வந்திருக்கின்றார்கள், இஷா முடித்துவிட்டு மகனார் மகாமே இப்ராஹிம் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார்கள், பின்னால் இருந்து வந்து கையை வைக்கின்றார்கள், மகனார் திரும்பி பார்க்கின்றார்கள், அத்தான் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

யார்? உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு ஆட்சி காலத்திலே மகனே! கொஞ்சம் தள்ளிக் கொள். மகா இப்ராஹிம் பக்கத்தில் தான் தோழ வேண்டும் என ஆசைப்படுகிறேன். தக்பீர் கட்டினார்கள். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று ஆரம்பித்து, போய்க்கொண்டே இருக்கிறது, போய்க்கொண்டே இருக்கிறது, போய்க்கொண்டே இருக்கிறது, போய்க் கொண்டிருக்கிறது.

கடைசியில் பஜர் உடைய அதானுக்கு கொஞ்சம் நேரத்திற்கு முன்னால் குல் அவூது பிரப்பின்னாஸ் இல் முடித்துவிட்டு ஒரு ரக்காத்தில் சலாம் கொடுத்தார்கள். அதுவரைக்கும் மகனாரும் அங்கேயே அமர்ந்திருந்தார்கள். அத்தான் ஓதுவதை கேட்டுக்கொண்டு கேட்கிறார்கள்? தந்தை ஏ! அமீருல் முஃமினே! ஒரு ரக்அத் தானே  தொழுதீர்கள்? வித்ரு தொழுதேன் என்றார்கள். எப்படி ஈடுபாடு அவர்களுக்கு குர்ஆனில் பாருங்கள். எந்த அளவிற்கு அவர்களுக்கு அந்த குர்ஆனிலே அப்படியே ஒன்றிணைந்து இருப்பார்கள். இதைப்போல் நிறைய சம்பவங்கள் இருக்கிறது.

இமாம் ஷாஃபி, ஈ ரஹிமஹுல்லாஹ். அவர்களுடைய வழக்கத்தை கேட்டீர்கள் என்றால் மிகவும் வித்தியாசமாக இருக்கும். ரமலான் மாதத்தில் 60 முறை குர்ஆனை கத்தம் செய்து விடுவார்கள். எத்தனை முறை? பகலில் ஒன்று இரவில் ஒன்று. பகலில் ஒன்று. இரவில் ஒன்று. பொதுவாக அவர்களுடைய வழக்கம் எப்படி என்று சொன்னால் அதாவது.

அதாவது மற்ற ரமலான் அல்லாத மாதங்களில் அவர்கள் ஒரு மாதத்திற்கு கதம் செய்தால், ரமலான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் அவர்கள் காலையில் ஒன்று இரவிலும் ஒன்று கத்தமா செய்யும் பழக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள். அதேபோல பல தாபியீன்கள் உடைய வரலாறுகளை பார்க்கும் பொழுது,

சில பேருக்கு சந்தேகம் வரும். அதாவது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூன்று நாளைக்கு குள்ளாக குர்ஆன் ஓதுவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்களே! நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஸஹீஹ் புகாரி உடைய அறிவிப்பு.

5052 – حَدَّثَنَا مُوسَى، حَدَّثَنَا أَبُو عَوَانَةَ، عَنْ مُغِيرَةَ، عَنْ مُجَاهِدٍ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، قَالَ: أَنْكَحَنِي أَبِي امْرَأَةً ذَاتَ حَسَبٍ، فَكَانَ يَتَعَاهَدُ كَنَّتَهُ، فَيَسْأَلُهَا عَنْ بَعْلِهَا، فَتَقُولُ: نِعْمَ الرَّجُلُ مِنْ رَجُلٍ لَمْ يَطَأْ لَنَا فِرَاشًا، وَلَمْ يُفَتِّشْ لَنَا كَنَفًا مُنْذُ أَتَيْنَاهُ، فَلَمَّا طَالَ ذَلِكَ عَلَيْهِ ذَكَرَ لِلنَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ: «القَنِي بِهِ»، فَلَقِيتُهُ بَعْدُ، فَقَالَ: «كَيْفَ تَصُومُ؟» قَالَ: كُلَّ يَوْمٍ، قَالَ: «وَكَيْفَ تَخْتِمُ؟»، قَالَ: كُلَّ لَيْلَةٍ، قَالَ: «صُمْ فِي كُلِّ شَهْرٍ ثَلاَثَةً، وَاقْرَإِ القُرْآنَ فِي كُلِّ شَهْرٍ»، قَالَ: قُلْتُ: أُطِيقُ أَكْثَرَ مِنْ ذَلِكَ، قَالَ: «صُمْ ثَلاَثَةَ أَيَّامٍ فِي الجُمُعَةِ»، قُلْتُ: أُطِيقُ أَكْثَرَ مِنْ ذَلِكَ، قَالَ: «أَفْطِرْ يَوْمَيْنِ وَصُمْ يَوْمًا» قَالَ: قُلْتُ: أُطِيقُ أَكْثَرَ مِنْ ذَلِكَ، قَالَ: «صُمْ أَفْضَلَ الصَّوْمِ صَوْمَ دَاوُدَ صِيَامَ يَوْمٍ وَإِفْطَارَ يَوْمٍ، وَاقْرَأْ فِي كُلِّ سَبْعِ لَيَالٍ مَرَّةً» فَلَيْتَنِي قَبِلْتُ رُخْصَةَ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَذَاكَ أَنِّي كَبِرْتُ وَضَعُفْتُ، فَكَانَ يَقْرَأُ عَلَى بَعْضِ أَهْلِهِ السُّبُعَ مِنَ القُرْآنِ بِالنَّهَارِ، وَالَّذِي يَقْرَؤُهُ يَعْرِضُهُ مِنَ النَّهَارِ، لِيَكُونَ أَخَفَّ عَلَيْهِ بِاللَّيْلِ، وَإِذَا أَرَادَ أَنْ يَتَقَوَّى أَفْطَرَ أَيَّامًا وَأَحْصَى، وَصَامَ مِثْلَهُنَّ كَرَاهِيَةَ أَنْ يَتْرُكَ شَيْئًا، فَارَقَ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَيْهِ "، قَالَ أَبُو عَبْدِ اللَّهِ: " وَقَالَ بَعْضُهُمْ: فِي ثَلاَثٍ وَفِي خَمْسٍ وَأَكْثَرُهُمْ عَلَى سَبْعٍ"

# ரமலானும் இரவு தொழுகையும்

அப்துல்லா இப்னு அம்ரு இப்னு ஆஸ் ரதியல்லாஹு அன்ஹும்மா. அவர்கள். இதெல்லாம் நாம் படிப்பினை பெற வேண்டும். இன்று மக்களுக்கு இந்த மாதிரி வரலாறுகளை, இந்த மாதிரி சம்பவங்களை எடுத்துச் சொல்வதை விட்டுவிட்டு, வேறு என்னன்னமோ சஹாபாக்களை பற்றி பேசப்பட்டு கொண்டிருக்கிறோம்.

இங்கே பாருங்கள், இது எல்லாமே புகாரியில் தான் இருக்கிறது, அப்துல்லா இப்னு அம்ரு இப்னு ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு. ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இடத்திலே ஷெடியூல் கேட்கிறார்கள். எப்படி? இபாதத்திற்கு எனக்கு ஒரு தர்தீப் சொல்லிக் கொடுங்கள் என்று. சுபஹானல்லாஹ்! எப்படி இருந்திருப்பார்கள் பாருங்கள்.

நான் நோன்பு வைக்க வேண்டும் ரசூலுல்லா. வாழ்நாள் முழுவதும் நோன்பு வைக்க வேண்டும். வேண்டாம். ஒவ்வொன்றாக குறைத்து விட்டு கடைசியில் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

நீங்கள் அப்படித்தான் வைக்க வேண்டும் என்று நினைத்தால், தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வைத்தது போல் வையுங்கள். ஒரு நாள் நோன்பு வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் நோன்பை விட்டு விடுங்கள். எப்படி சொல்வார்கள் என்று சொன்னால், நமக்கும் சஹாபாக்களுக்கும் வித்தியாசம் என்னவென்றால், நம்மை இபாதத்திலே பின்னால் இருந்த தள்ள வேண்டி இருக்கிறது.

அறிவிப்பாளர் : அப்துல்லா இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 5052 குறிப்பு 2

எப்படி? கொஞ்சம் இபாதத்திற்காவது நீ போய் விடு என்று சொல்லி பின்னாடி இருந்து நம்மை இபாதத்திற்கு என்ன செய்ய வேண்டி இருக்கிறது? தள்ள வேண்டி இருக்கிறது. ஒரு இரண்டு ரக்ஆது தொழுவதற்கு பிடித்து தள்ள வேண்டி இருக்கிறது.

அங்கு எப்படி என்றால்? நீங்கள் செய்த இபாதத்திற்கு அதையும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று பின்னால் தள்ள வேண்டி இருந்தது. எப்படி? இவ்வளவு இபாதத்து செய்கின்றீர்கள். இவ்வளவு வேண்டாம். உங்களை சிரமப்படுத்தி கொள்ள வேண்டாம் என்று சொல்லி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கொஞ்சம் உங்களை ரிலாக்ஸ் செய்யுங்கள் கொஞ்சம் relax செய்யுங்கள் என்று அவர்களுடைய இபாதத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துனியாவின் பக்கம் திரும்பவதற்கு முயற்சித்தார்கள்.

நம்மள என்ன செய்ய வேண்டி இருக்கிறது? புல்டோஸர் வைத்து கட்டி இழுத்தால் கூட இந்த பக்கம் வரமாட்டோம் போலிருக்கிறது. இரண்டு மூன்று சம்பவத்தை இடையில் பார்த்து விடுவோம். ஏனென்றால் புரிந்து கொள்ள வேண்டும். சஹாபாக்கள் சஹாபாக்கள் என்றால், சும்மா. ஏன் அல்லாஹு தஆலா அவர்கள் மீது, அவ்வளவு மஹபத் வைத்திருந்தான்? ஏன் சஹாபாக்களை பார்த்து அல்லாஹ் சொல்லுகின்றான்.

## ரமலானும் இரவு தொழுகையும்

مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللَّهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذَلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَى عَلَى سُوقِهِ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ الْكُفَّارَ وَعَدَ اللَّهُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ مِنْهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا

முஹம்மது (அவர் மீது அல்லாஹ்வின் அருள் நிலவுக!) அல்லாஹ்வின் தூதர் ஆவார். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளர்கள் மீது கடினமானவர்கள், தங்களுக்கு மத்தியில் கருணையாளர்கள் ஆவர். (தொழுகையில் குனிந்து) ருகூஃ செய்தவர்களாக; (சிரம் பணிந்து) சுஜூது செய்தவர்களாக அவர்களை நீர் காண்பீர். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் விரும்புகிறார்கள். (அல்குர்ஆன் 48 : 29)

அவர்களின் தோற்றம் அவர்களின் முகங்களில் சுஜூது (-சிரம் பணிந்து வணங்குவது) உடைய அடையாளமாக இருக்கும். இது தவ்ராத்தில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாகும். இன்னும், இன்ஜீலில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாவது, (நெல், கோதுமை போன்ற) ஒரு விளைச்சலைப் போலாகும். அது (-அந்த விளைச்சல்) தனது (செடியின்) காம்பை வெளியாக்கியது. இன்னும், அதைப் பலப்படுத்தியது. பிறகு அது தடிப்பமாக ஆனது. அது தனது தண்டின் மீது உயர்ந்து நின்று, விவசாயிகளை கவர்கிறது. (அல்குர்ஆன் 48 : 29)

